

ஆற்காடு நகரில் மாவட்ட மருத்துவ அணி சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடந்த இரத்ததான முகாம் மற்றும் நல உதவிகள் வழங்கிய நிகழ்வினை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்தார். உடன் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஏ.கே.சுந்தரமூர்த்தி, டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், ஏ.வி.சரவணன் உள்ளிட்டோர் உள்ளனர்.



நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள நடராஜன் தமயந்தி மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவச் செல்வங்களைச் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். மாணவச் செல்வங்களே மகிழ்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் தேர்வு எழுதுங்கள் என்று கூறினார்.

திருவேற்காடு நூம்பல் பகுதியில்

# பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று 3 நாட்களில் பேருந்து சேவை!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்தார் !



திருவள்ளூர் மார்ச் 04;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் அண்மையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சியில் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்தார் அப்போது நூம்பல் பகுதியில் திருவேற்காட்டில் தடம்S 23 ஐயப்பன்தாங்கல் முதல் குமணன்சாவடி வரை முன்பு இயக்கப்பட்டு வந்த சிற்றுந்து நிறுத்தப்பட்டிருந்தது என்று பொதுமக்கள் கோரிக்கையை வைத்தனர்.

அப்போது அமைச்சர் சம்பந்தப்பட்ட போக்குவரத்து துறை அமைச்சரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இப்பகுதிக்கு இயங்கிக் கொண்டிருந்த பேருந்து வசதி மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தரவேண்டும் என்று தெரிவித்தார்

இந்நிலையில் மீண்டும் பேருந்து வசதி தொடக்க விழா நடைபெற்றது இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து பேருந்து சேவையை தொடங்கி வைத்து பேருந்தில் பொதுமக்களுடன் அமர்ந்து பயணம் மேற்கொண்டார்

உடனடியாக மூன்று நாட்களிலே பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்த அமைச்சருக்கு அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

உடன் திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் திருவேற்காடு நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் என்.இ.கே. மூர்த்தி மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், 14வது வார்டு வட்டக் கழக செயலாளர் நகர மன்ற உறுப்பினர் பி.உமாபதி, வட்ட செயலாளர் ஜெகன், நிர்வாகிகள் பானுஅரசு, நும்பால் ஆசைதம்பி, சாது, என்.ராஜ், அப்பு (எ) ஜெபராஜ் ஆ.நாராயணன், ராஜினி, நரேஷ், ராஜேஷ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி இளைஞரணி சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் முரசொலி ஆர். ஸ்ரீதர் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் மாவட்ட அமைப்பாளர் பா. பிரகாஷ் வட்டச் செயலாளர் கே எஸ் தினேஷ் பிரபு முன்னிலையில் 110வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் பேனா இனிப்பு மற்றும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணை அமைப்பாளர் என். மோகனவேல், பகுதி அமைப்பாளர் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் 110வது வட்டக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


24-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பவானி கிட்டு (எ)
ப.சீ.கிருட்டினசாமி

பவானி கிட்டு (எ)
ப.சீ.கிருட்டினசாமி
முன்னாள் நகர கழக செயலாளர்,
தலைமை செயற்குழு உறுப்பினர், பவானி நகர தி.மு.க.

ப.சீ.நாகராசன், பவானி நகர கழக செயலாளர்

மனைவி : K.ராஜம்மாள்
தம்பி மனைவி : N.சந்திரா நாகராசன்

மகன்கள் :
K.செங்குட்டுவன் B.E.,
N.இளங்கோவன் B.E.,

மருமகள்கள்
S.ரங்கநாயகி B.Sc.,
E.சிந்தூரி B.E., M.C.,
பவானி நகரமன்ற தலைவர்

பேத்தி : S.வாசுகி B.Tech.,
பேரன்கள் : S.கிருஷ்ணராஜ், E.S.கிருத்திக், E.S.நித்விக்

பவானி நகர தி.மு.க.
இளைஞரணி மற்றும் சார்பு அணிகள்
ஈரோடு மாவட்டம்
உதயம் நண்பர்கள் குழு, பவானி